# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1423/6 - 2005 දෙසැම්බර් 13 වැනි අඟහරුවාදා - 2005.12.13

*1423/6 ஆம் இலக்கம் - 2005 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 13 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச.வ.- பீ 21/78*

**1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டம்**

*1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 18 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படுவதாகிய 24அ என்னும் பிரிவின்கீழ் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் ஆக்கப்பட்ட கட்டளைச் சட்டம்*

செயலாளர்,
பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு.

2005.11.02

**கட்டளைச் சட்டம்**

1. இக்கட்டளைச் சட்டம் 2005 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க பட்டப்பின் ஆங்கில நிறுவகக் கட்டளைச் சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம் என்பதுடன் 2005.10.01 ஆம் தேதிமுதல் நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

2. இக்கட்டளைச் சட்டம் 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 24அ என்னும் பிரிவின்கீழ் சனாதிபதியால் ஆக்கப்பட்டு 2005, ஒற்றோபர் 31 ஆம் தேதிய 1471/12 ஆம் இலக்க அதிவிசேட வர்த்மானியில் வெளியிடப்பட்ட கட்டளையால் தாபிக்கப்பட்ட (இதனகத்துப்பின்னர் "நிறுவகம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) பட்டப்பின் ஆங்கில நிறுவகத்திற்கு ஏற்புடைத்தாதல் வேண்டும்.

3. நிறுவகம் (இதனகத்துப் பின்னர் "பல்கலைக்கழகம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) இலங்கை திறந்த பல்கலைக்கழகத்துடன் இணைந்திருத்தல் வேண்டும்.

4. நிறுவகமானது, சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் (இதனகத்துப் பின்னர் "ஆணைக்குழு" எனக் குறிப்பீடு செய்யப்படும்) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் பணிப்பிற்கும் கட்டுப்பாட்டிற்கும் அமையப் பின்வரும் தத்துவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்:-

(அ) மாணவர்களை அனுமதிப்பதற்கு ;

(ஆ) ஆங்கில மொழித்துறையில் பாடநெறிகளை நடாத்துவதற்கு ;